வருடாந்த அறிக்கை 2018

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

பொருளடக்கம்

தலைப்பு	பக்க இலக்கம்
தொலைநோக்கு மற்றும் செயற்பணி	4
பணிப்பாளர் சபை	5
தலைவரது மீள்நோக்கு	8
சபை பற்றிய தகவல்கள்	9
ஒட்டுமொத்த செயலாற்றுகை -2018	10
வருடாந்த கணக்கு அறிக்கை	16
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை	45

2018
வருடாந்த அறிக்கை

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

எமது தொலைநோக்கு

விவசாய சமூகத்தினரினதும் குறைந்த வசதிகளுடைய மக்களினதும் கௌரவத்தை மீள உருவாக்கும் நோக்கில் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதன்மூலம் பொருளாதார சுயாதீனத்தையும் சுய நம்பிக்கையையும் உருவாக்குதல்.

எமது செயற்பணி

பயனாளிகளின் பொருளாதார சுயாதீனத்தை ஏற்படுத்தும் பொருட்டும், பிறரில் சார்ந்திருக்கும் கலாசாரத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டும் விவசாய, கால்நடை மற்றும் ஏனைய துறைகளின் திறன் அபிவிருத்தி பொருட்டும் பங்குகொள்ளும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.

2018 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை

(2018.01.29 முதல் 2018.03.21 வரை)

பெயர்	பதவி	சேவை நிலையம்
திரு தம்மிக பீரிஸ்	தலைவர்	இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை (தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை)
திரு கே.ஏ.பண்டார	உப தலைவர்	இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை(தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை)
திரு கே.மஹேசன்	மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)	தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
திரு.பி.எஸ்.எஸ்.விஜேரத்ண	சிரேட்ட உதவி செயலாளர்	கமத்தொழில் அமைச்சு
திரு டப்.ஏ.டி.டி.எம்.பிரியந்த	பிரதான உள்ளக கணக்காய்வாளர்	பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
திரு.விஜயசிறி விக்ரமசிங்க	பணிப்பாளர் சபை உறுப்பினர்	இல. 409/3சீ, மகய்யாவத்த, கலபுவாவ, முல்லேரியா நகரம்
திரு.கிஷான் நிலங்க	பணிப்பாளர் சபை உறுப்பினர்	898/ ஏ4, தியதெர, பகலவெல வீதி, பெல்வத்த
திரு.பி.டப்.தர்மசிறி வெலிகல	பணிப்பாளர் சபை உறுப்பினர்	இல.95,பண்டாரநாயக்க மாவத்தை, மிஹிதுபுர. அனுராதபுரம்.
திரு.ஏ.ரீ.எம்.ஏக்கநாயக்க	பணிப்பாளர் சபை உறுப்பினர்	இல. 121, யசசிறிபுர. அனுராதபுரம்.

2018 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை

(2018.08.08 முதல் 2018.12.17 வரை)

பெயர்	பதவி	சேவை நிலையம்
திரு சட்டத்தரணி புந்திக்க இந்தமல்கொட	தலைவர்	இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை (தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை)
திரு சீ.எச்.குமாரசிங்க	உப தலைவர்	இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை(தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை)
திரு கே.மஹேசன்	மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)	தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
திருமதி சம்பிக்கா தர்மசேன	பணிப்பாளர் (அபிவிருத்தி)	கமத்தொழில் அமைச்சு
திரு டப்.ஏ.டி.டி.எம்.பிரியந்த	பிரதான உள்ளக கணக்காய்வாளர்	பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
திரு சமிந்த பதிரண	பணிப்பாளர் சபை உறுப்பினர்	லேக்ஏஜ் ஹொலிடேஇன், சதுன்கம வீதி, திஸ்ஸமகாராமய.
திரு அரோஷ றொட்றிகு	பணிப்பாளர் சபை உறுப்பினர்	இல.65, எபார்டமன்ட் 6/2, கெபிடல்ரெசிடன்ஸ், தர்மபால மாவத்தை, கொழும்பு 07.
திரு ஆர்.எம்.ஏ.சந்திரதாச	பணிப்பாளர் சபை உறுப்பினர்	இல.11/4பீ, பிரஸ்ட்டிப்கோட்ஸ், சுமணசார மாவத்தை, வெலேகொட, மாத்தறை.

2018 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடைபெற்ற திகதிகள்

- 385 ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2018.01.29
- 386 ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2018.02.16
- 387 ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2018.03.21
- 388 ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2018.08.08
- 389 ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2018.09.07
- 390 ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2018.10.12
- 391 ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2018.11.28
- 392 ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2018.12.17

2018 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை கூடிய நாட்களின் எண்ணிக்கை 08 ஆகும்..

தலைவரது மீள்நோக்கு

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை எய்தும் முகமாக பல்கூறு அணுகுகை ஒன்றின் ஊடாக உணவு பாதுகாப்பு மற்றும் தேசிய நலனை உறுதிப்படுத்துவதன் மூலம் இலங்கையின் புதிய விவசாய உணவு கைத்தொழிலில் பங்குகொள்ள கிடைத்தமை பெரும் மகிழ்ச்சியாகும். என்றும் பசுமை பொருளாதாரக் கொள்கையிலேயே இலங்கை தொடர்ந்தும் கவனம் செலுத்தியிருப்பதுடன் அங்கு பொருளாதார மற்றும் சமூக நிலமைகள் மாற்றமடைந்தமையினால் சுற்றாடல் நேயமுள்ள சூழ்நிலையை அனைவருக்கும் உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் நுகர்வுப் போக்கு மாற்றமடைதல் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதுடன், கடந்த சில தசாப்தங்களில் நீரிழிவு நோய், பல்வேறு புற்று நோய்கள் மற்றும் இரத்தத்தில் கொலஸ்ட்ரோல் மட்டம் அதிகரித்தல் உள்ளிட்ட தொற்றாத நோய்கள் துரிதமாக அதிகரித்து ஒவ்வொரு வருடமும் பல உயிர்களை காவு கொள்கின்றன. பொதுவாக, மொத்த மரணங்களில் 75% வீதமான மரணங்கள் தொற்றாத நோய்கள் காரணமாக இடம்பெறுகின்றன. இவை அனைத்தும் உணவு பழக்கவழக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். ஆகையினால், பாரம்பரிய முறையிலிருந்து விடுபட்டு சுகாதாரத்துக்கு பாதகமான மேற்குலக போக்கிற்கு உணவுகள் மாற்றமடைந்தமை நாட்டினுள் பெரும் மக்கள் பிரச்சினை ஒன்றாக காணலாம்.

மேற்குலக நாடுகளின் ஆக்கிரமிப்புக்குப் பின்னர் உணவு பழக்கவழக்கங்கள், சுகாதாரம் மற்றும் நீண்ட ஆயுள் என்பன தொடர்பில் நம்ப முடியாத அளவுக்கு பெருமளவு அனுபவங்கள் அடங்கிய புராதன உள்;ர் அறிவு படிப்படியாக குறைந்தது. சுதந்தரத்திற்கு பின்னரும் இலங்கை அரசாங்கங்கள் காலனித்துவ பொருளாதார கட்டமைப்புடன் முன்நோக்கிச் செல்ல விருப்பம் காட்டின. உதாரணமாக, நகரமயமாக்கல் கோதுமை நுகர்வுக்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் இலங்கையின் அரிசி நுகர்வுக்கு பாதகமாக தாக்கம் செலுத்தியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. சுப்பர் மார்க்கட் வளர்ச்சிக்கு உடனிகழ்வாக இலங்கையில் கடந்த பத்து வருடங்களினுள் பாரிய நகரங்களில் மேற்குலக உடனடி உணவுகளில் துரித வளர்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளதுடன் அவை சிறிய நகரங்களை நோக்கி விரிவடைந்து கொண்டிருக்கின்றன.

சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் மேற்குலக உணவு பழக்கத்தின் தாக்கத்தை குறைப்பதற்காக கமத்தொழில் அமைச்சு வரலாற்று சிறப்புமிக்க நிலமைக்கு வந்திருப்பது இலங்கையர்கள் மத்தியில் மரபுரீதியான, தேசிய உணவுகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதன் மூலமாகும். இலங்கையின் மரபுரீதியான உணவுகள், தேசிய தானிய வகைகள், வேர்கள், கிழங்குகள், இலைகள், பழங்கள் மற்றும் மரக்கறி உள்ளிட்ட பல்வேறு சுகாதார அனுகூலங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளன என்பதற்கு சான்றுகள் உள்ளன.

சுகாதார நலனற்ற மேற்குலக உணவுகளிலிருந்து விசேடமாக கோதுமை மா கலாசாரத்திலிருந்து தேசிய உணவு பழக்கத்திற்கு மாறுவதற்காக மனிதர்களின் மனதை மாற்றுவது இலகுவான காரியம் அல்ல. இதற்கிணங்க, கௌரவ அமைச்சர் மஹிந்த அமரவீர அவர்களின் எண்ணக்கருவின்படி மரபுரீதியான, தேசிய உணவுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல் பொருட்டு பல்வேறு செயற்றிட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தியதுடன் “ நாங்கள் பயிரிட்டு – நாங்கள் சாப்பிடுகிறோம்” எனும் எண்ணக்கரு எங்களால் பலப்படுத்தப்பட்டது. உதாரணமாக, பலவித உணவு கண்காட்சிகள் மற்றும் உணவு விழாக்களுடன் தொற்றாத நோய்களை தடுக்கும் படிநிலையொன்றாக இலங்கையர்கள் மத்தியில் மரபுரீதியான உணவு முறைகளை பிரபல்யப்படுத்தி புரிய வைப்பதற்கு உத்தேசித்துள்ளோம். தனியார் அரச பங்களிப்புடன் புத்தாக்க தொழில்நுட்ப ஈடுபாடுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட உணவு உற்பத்தியானது சபையின் புதிய வெற்றி ஒன்றாக மாறியுள்ளதுடன் விவசாய உணவு கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதன்மூலம் நுகர்வோருக்கு உச்ச போசணை பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, எமது பல்வேறு செயற்பாடுகளை துரிதப்படுத்தி எமது நாட்டின் நலன் பொருட்டு அண்மித்த எதிர்காலத்தில் எமது பணிகளை நிறைவேற்ற முடியும் என்பது எனது நமபிக்கையாகும்.

திரு புந்திக்க இந்தமல்கொட, சட்டத்தரணி

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை (தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை)

சபை பற்றிய தகவல்கள்

சபையின் பெயர்:
தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை
(இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை)

சட்ட உருவரைச்சட்டகம் மற்றும் அமைவிடம்

1973ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு சட்டத்தின்மூலம் தாபிக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டில் தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை என பெயர் மாற்றுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது.

பிரதான செயற்பாடுகளும் குறிக்கோள்களும்

பிரதானமாக பொருளாதாரரீதியாக பாதிப்புற்ற மக்களுக்கு சேவையாற்றும் நிறுவனம். அதன் குறிக்கோள்களாவன:

- அரசாங்கத்தினால் தயாரிக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்க சமூக, பொருளாதார அபிவிருத்தி பொருட்டு உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற முகவராண்மைகளின் நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- பொது வசதிகள், சமூக நலனோம்பல், பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களை செயற்படுத்துகையில் நிறுவனங்களுக்கும் பிற சபைகளுக்கும் உதவுதல்.
- விவசாய,கைத்தொழில் அபிவிருத்திபால் ஈடுபடுத்தப்பட்ட குறித்துரைத்த செயற்றிட்டங்களுக்கு நன்கொடை வழங்குதலும் மேம்படுத்தலும், ஒருங்கிணைப்பு செய்தலும்.
- விவசாய, கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்காக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரச சார்பற்ற முகவராண்மைகளை மதிப்பீடு செய்தல்.
- சருவதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் மற்றும் ஏனைய அதற்குச் சமமான வெளிநாட்டு நிறுவனங்கள், சங்கங்கள் அல்லது சமூகங்களுடன் ஒத்துழைத்தல்

வரிசை அமைச்சு

கமத்தொழில் அமைச்சு

அலுவலகம்

இல.45,கிரிமண்டல மாவத்தை,கொழும்பு 5.

தொலைபேசி : 0112506895/0112505684
தொலைநகல் : 0112506907
மின்னஞ்சல் : ffhc.srilanka@gmail.com
இணையத்தளம் : www.nfpb.lk

கணக்காய்வாளர்கள் :

கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்
உள்ளக கணக்காய்வுப் பிரிவு - கமத்தொழில் அமைச்சு

வங்கியாளர்கள் :

இலங்கை வங்கி – பொரளை
மக்கள் வங்கி – தெகிவளை

தந்திரோபாயங்கள்

- அபிவிருத்தி முன்னெடுப்புக்களை ஒரு பொது குறிக்கோள்பால் ஒன்றிணைத்தல்.
- பொருளாதார வளர்ச்சி, சமூக, கலாசார அபிவிருத்திகளில் பங்குபற்றுவதற்காக கிராமிய மக்களுக்கு வாய்ப்பு வழங்குதல்.
- அபிவிருத்தி செயன்முறையில் முழுமையாக பங்குபற்றும் பொருட்டு கிராமிய மக்களை வலுவூட்டுதல்.
- சுயமாக முன்னோக்கிச் செல்லும் நீடித்த அபிவிருத்தியை ஏற்படுத்தும் பொருட்டு சாதனை நோக்கிய விழுமியங்களுடனான சுய நம்பிக்கைக்கும் இயலுமைக்கும் பாரம்பரிய கிராமிய மக்களை மாற்றுதல்.
- உள்நாட்டு உணவு உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவித்தல்.
- அறுவடைக்கு பிந்திய சேதத்தை குறைக்கும் தொழினுட்பத்தை அடி மட்டத்திற்கு கொணடுசெல்லல்.

ஒட்டுமொத்த செயலாற்றுகை - 2018

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் அபிவிருத்திப் பிரிவானது, 2018ஆம் ஆண்டில் 10 செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ளதுடன், இந்தச் செயற்றிட்டங்களின் சுருக்கமான அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டங்களை மேற்கொள்வதன் பிரதான நோக்கங்களாவன ; நஞ்சற்ற உள்;ர் உணவுகள், பெறுமதி சேர்க்கப்பட்ட உணவுகள் மற்றும் உள்;ர் விவசாய உள்ளீடுகளை சலுகை விலையில் நுகர்வோருக்கு வழங்கி அதன்மூலம் உள்;ர் விவசாயிகளின் பொருளாதார மட்டத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் மேம்படுத்துதல் அத்துடன் சிறிய, நடுத்தர அளவு உற்பத்தியாளர்கள் பொருட்டு அவர்களது உற்பத்திகளை ஊக்குவிப்பதன்மூலம் அவர்களை வலுப்படுத்துதல் என்பனவாம்.

1. தாவரக்கன்று விற்பனைக்கூடம் – நாரஹேன்பிட்டி

கிராமிய மக்களும் அதேபோன்று நகர மக்களும் தமது வீட்டுத்தோட்டங்களில் தங்களுக்கு தேவையானவற்றை இயலுமான வகையில் செய்கை பண்ணி நுகர்வதற்கு தூண்டுவதன்மூலம், “ நஞ்சற்ற” உணவுகளை பிரபல்யப்படுத்துதலை நோக்காகக் கொண்ட எமது நிறுவனம் நகரவாசிகளுக்கு வீட்டுத்தோட்டச் செய்கை பொருட்டுத் தேவையான சகல விதமான மரக்கறி கன்றுகள் உள்ளிட்ட கன்று வகைகளை சலுகை விலையில் பெற்றுக் கொடுப்பதனை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டமொன்றாக நாரஹேன்பிட்டி நாற்று மேடையைக் குறிப்பிடலாம். மூலிகைக் கன்றுகள், பூக் கன்றுகள், பழக்கன்றுகள் (விசேடமாக அரிதாகக் கிடைக்கக்கூடிய பழங்கள்), பழ & மரக்கறி விதைகள், மரக்கறி மற்றும் பூ பசளைகள், சேதனப் பசளைகள், பூச்சி விலக்கிகள், விவசாய உபகரணங்கள் என்பனவற்றை இந்த நிலையத்திலிருந்து விலைக்கு வாங்கலாம் என்பதுடன், பயிர் செய்கை சம்பந்தமான அறிவுரைகளையும் இந்த நிலையத்திலிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

இந்த ஆண்டில் இச்செயற்றிட்டம் பொருட்டான செயற்பாட்டு செலவினம் ரூ.9.335மில். ஆக இருந்ததுடன் செயற்பாட்டு வருமானமாக ரூ.11.708மில். ஈட்டப்பட்டிருந்தது. அத்துடன், ஆண்டில் தேறிய இலாபம் ரூ.2.311மில். ஆகும். இத்தரவுகளின்படி, இச்செயற்றிட்டம் கடந்த ஆண்டினை விட முன்னேற்றத்தை கண்டுள்ளது.

நாற்று மேடை மற்றும் விற்பனைக்கூடம்

2. தாவரக்கன்று விற்பனைக்கூடம் – தெகிவளை

தெகிவளை விற்பனைக்கூடமும், நாரஹேன்பிட்டி விற்பனைக்கூடம் நிறைவேற்றும் பணிகளையே நிறைவேற்றுகிறது.

இந்த ஆண்டில் செயற்பாட்டு வருமானமாக ரூ.6.288மில். ஈட்டப்பட்டிருப்பதுடன் ரூ.5.565 மில். செயற்பாட்டு செலவினமாக உறப்பட்டிருந்தது. ரூ.0.710மில். தொகை தேறிய இலாபமாக ஈட்டப்பட்டிருந்தது.

3. விவசாயி உற்பத்திப்பொருள் மற்றும் உணவு விற்பனைக்கூடம் – தெகிவளை

விவசாயி உற்பத்திப்பொருள்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட உள்;ர் முயற்சியாளர்களின் உற்பத்திகள், அதேபோன்று நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்ற பாரம்பரிய அரிசி வகைகள் (சுவந்தல், கருஞ்சீனட்டி, பச்சைப்பெருமாள் போன்ற அரிசி இனங்கள்), மவ்போஷ, சுவபோஷ(போசாக்கான உணவு), தோசை மா கலவை, விசேட அரிசி மா கலவை போன்ற நஞ்சற்ற உணவு வகைகளை பிரபல்யப்படுத்தும் நோக்குடன் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அத்துடன், இதற்கு இணைந்ததாக செயற்படும் உணவகம் மூலம் காலையுணவு மற்றும் மதிய உணவு, போசக்கான, தரமான உணவு வகைகளை சலுகை விலையில் மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் செயற்பாட்டு செலவினம் ரூ.41.649 மில். ஆகும். செயற்பாட்டு வருமானம் ரூ.41.024மில். ஆகும்.

4. புத்தல மற்றும் தணமல்வில பண்ணைகள் அபிவிருத்தி

புத்தல பண்ணை (பசளை உற்பத்தி)

புத்தல மற்றும் தணமல்வில ஆகிய பிரதேசங்களில் 1986 ஆம் ஆண்டு முதல் பண்ணை அபிவிருத்தி செயற்றிட்டம் இன்று வரை செயற்படுத்தப்பட்டு வருகிறது. 2017 ஆம் ஆண்டில் புத்தல பண்ணையில் ஆரம்பிக்கப்பட்ட முன்னோடி செயற்றிட்டமொன்றாக கொம்போஸ்ட் உற்பத்தி செயற்றிட்டத்தை குறிப்பிடலாம். இங்கு கொம்போஸ்ட் பசளை, தும்புதுகள் மற்றும் சாடிக் கலவை போன்ற பசளை வகைகளின் தயாரிப்பு வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகிறது.
அவ்வாறு உற்பத்திசெய்யப்படுகின்ற பசளை வகைகள் எமது நிறுவனத்திற்குச் சொந்தமான விற்பனைக்கூடங்கள் ஊடாக நியாயமான விலையில் மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

2018ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் செயற்பாட்டு வருமானம் ரூ.2.571மில். ஆக இருந்ததுடன் செயற்பாட்டு செலவினம் ரூ.2.527மில். ஆகும். இந்த ஆண்டில் ரூ.0.176மில். தொகை தேறிய இலாபம் ஈட்டப்பட்டிருந்தது.

தணமல்வில பண்ணை

பிரதேசத்தின் *சாகினி* குடும்பங்களினதும் பங்கேற்புடன் தணமல்வில பண்ணை மாதிரி பண்ணை ஒன்றாக பேணப்படுவதுடன் கொம்போஸ்ட் பசளை உற்பத்தியும் இடம்பெறுகிறது. 2018 ஆம் ஆண்டில் தணமல்வில பண்ணையின் செயற்பாட்டு செலவினம் ரூ.0.475 மில். ஆகும். செயற்பாட்டு வருமானம் ரூ.0.116மில். ஆகும்.

5. சுவபோஷ போசணை உணவு, அரிசி மா, தோசை மா, மவ்போஷ செயற்றிட்டம்

அரிசி மா பாவனையை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டமொன்றாக அரிசி மா செயற்றிட்டத்தை குறிப்பிடலாம். இதன் உற்பத்தி நடவடிக்கை நிறுவனத்துக்குச் சொந்தமான பேராதெனிய கன்னோறுவை தொழிற்சாலையில் இடம்பெறுகிறது. இதற்கு உடனிகழ்வாக தோசை மா செயற்றிட்டமொன்றும் செயற்படுத்தப் படுகின்றது. இதற்காக 2018 ஆம் ஆண்டில் இந்தச் செயற்றிட்டத்தின் செயற்பாட்டு வருமானம் ரூ.0.553 மில். ஆக இருந்ததுடன் செயற்பாட்டுச் செலவினம் ரூ.0.848மில். ஆக இருந்தது.

சுவபோஷ மற்றும் மவ்போஷ செயற்றிட்டம்

நிறை குறைந்த கர்ப்பிணிப் பெண்களுக்கு போசாக்குப் பொதி வழங்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்றிட்டம் பின்னர் சுவபோஷ மற்றும் மவ்போஷ ஆகிய பெயர்களின் கீழ் எமது நிறுவனத்திற்குச் சொந்தமான விற்பனைக்கூடங்கள் மற்றும் அதிகாரம்பெற்ற நிறுவனங்கள் ஊடாக நியாயமான விலையில் விற்கப்படுகின்றன. இதன் பொருட்டு 2018 ஆம் ஆண்டில் இந்தச் செயற்றிட்டத்தின் செயற்பாட்டு வருமானம் ரூ.1.156 மில். ஆக இருந்ததுடன் செயற்பாட்டுச் செலவினம் ரூ.2.53மில். ஆக இருந்தது.

6. குறைபாவனை பழங்களை பயன்படுத்தி பழ குடிவகைகளை தயாரித்தல்

குறைபாவனை பழ நுகர்வினை மக்களிடையே பிரபல்யப்படுத்துதல் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் நோக்கில் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு விரலிக்காய், சீத்தாப்பழம் மற்றும் மாழ்பழம் முதலிய பழங்கள் உபயோகிக்கப்படுவதுடன் இந்த குடிவகைகள் கன்னோறுவை உணவு ஆராய்ச்சி அலகில் தயாரிக்கப்படுகின்றன. இந்நோக்கத்துக்காக 2018 ஆம் ஆண்டில் இந்தச் செயற்றிட்டத்தின் செயற்பாட்டு வருமானம் ரூ.0.361மில். ஆக இருந்ததுடன் செயற்பாட்டுச் செலவினம் ரூ.0.712மில். ஆகும்.

பழ குடிவகை தயாரித்தல் **தயாரிக்கப்பட்ட பழ குடிவகை போத்தல்**

7. பாரம்பரிய நெல் கொள்வனவு செயற்றிட்டம்

ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் அனைவருக்கும் உணவு எனும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை எய்தும் முகமாக பாரம்பரிய நெல் உற்பத்தி செய்யும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை முழுவதும் பரந்து காணப்படும் தொற்றாத நோய்களிலிருந்து தப்புவதற்காக இந்த அரிசி நுகர்வு முக்கியமானதாகும். இந்த அரிசியை நுகர்வதன்மூலம் ஆரோக்கியமிக்க மக்களை உருவாக்குவதும் உள்;ர் விவசாயிகளை வலுப்படுத்துவதும் இடம்பெறுகின்றன. அனுராதபுர மாவட்டத்தில் பாரம்பரிய நெல் செய்கை பண்ணும் விவசாயிகளிடமிருந்து நியாயமான விலையில் நெல் கொள்வனவு செய்யப்பட்டு அவை கலன்குட்டிய தொழிற்சாலையில் அரிசியாக மாற்றப்பட்டு தெகிவளை, நாரஹேன்பிட்டி விற்பனைக்கூடங்கள் மற்றும் தனியார் துறை ஊடாக விற்கப்படுகின்றது. இந்தச் செயற்றிட்டத்தின் செயற்பாட்டுச் செலவினம் ரூ.1.677மில். ஆகும். வருமானம் ரூ.0.636மில். ஆகும்.

8. சோயா சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உணவுகளை தயாரிக்கும் செயற்றிட்டம்

புரதம், இலிப்பிட்டு, தாதுப்பொருள்கள் மற்றும் விற்றமின் நிறைந்த உணவொன்றான சோயா அவரை சார்ந்த போசணையில் குறைவற்ற, உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு உள்ளிட்ட தொற்றாத நோய்களினால் பீடிக்கப்படுகின்ற சிறுவர், இளைஞர் மற்றும்

வயோதிபர் அனைவருக்கும் போஷாக்கான சோயா சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உணவு உற்பத்திகளை சமுதாயத்துக்கு முன்வைத்தல் இதன் நோக்கமாகும். சோயாவில் காணப்படுகின்ற வித்தியாசமான சுவை மற்றும் மணத்தை விஞ்ஞானரீதியாக அகற்றி இந்த செயற்கையான உணவு நுகர்வோருக்கு முன்வைக்கப்படுகிறது. இதற்காக ரூ.0.670மில். நிதியேற்பாடு கமத்தொழில் அமைச்சிடமிருந்து கிடைத்துள்ளது.

இந்த உற்பத்திகளை எதிர்காலத்தில் அரச மற்றும் தனியார் முயற்சியாளர்களின் கீழ் நாடளாவிய ரீதியில் விஸ்தரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

சோயா சார்ந்த விசுக்கோத்து தயாரித்தல்

9. சோளம் இறக்குமதி செய்தல்

நுகர்வோர்களின் பெரும் வேண்டுகோளின் பேரில், இலங்கையில் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி பொருட்டு கோழித் தீனின் பிரதான சேர்வையொன்றாக சோளம் அவசியமாகும். எனினும், தற்போதைய நிலமையின் கீழ் இலங்கையில் 200,000 மெ.தொ. சோளம் உற்பத்தி செய்யப்படுவதுடன் அது வருடாந்த தேவைப்பாட்டில் 50% மட்டுமே ஆகும்.

தற்போது சோள இறக்குமதி தனியார் கம்பனிகள் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் அதற்காக அவர்கள் தனியுரிமையை பேணுவதினால் கோழித் தீன் உற்பத்திகளின் விலை அதிகரித்தமையினால் வாடிக்கையாளர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். இந்த நிலமையை ஒழுங்குபடுத்துவதற்காக கௌரவ கமத்தொழில் அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் விலங்குணவுக்காக 50,000 மெ.தொ. இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்டது. இதற்காக தனியார் துறையின் முயற்சியாண்மை பங்களிப்புடன் சோளம் இறக்குமதி செய்யப்பட்டதுடன், அவற்றுள் 37,000 மெ.தொ. இறக்குமதி செய்யப்பட்டதுடன் ஈட்டப்பட்ட வருமானம் ரூ.1929.82 மில். அத்துடன் தேறிய இலாபம் ரூ.41.07மில். ஆகும்.

10. உள்;ர் சோளம் கொள்வனவுசெய்தல்

மேலதிக உணவுப் பயிர் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமொன்றாக அனுராதபுர மாவட்டத்திலும் மொனராகலை மாவட்டத்திலும் உள்ள சோளச் செய்கையாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

.

இதன்மூலம் எமது நிறுவனம் சோளச் செய்கையாளர்களிடமிருந்து அவர்களது அறுவடையை உரிய நேரத்தில் கொள்வனவு செய்து அதற்கு நிச்சயிக்கப்பட்ட விலையையும் சந்தையையும் உருவாக்குவதற்கு இயலுமாக இருந்தது.
இந்தச் செயற்றிட்டத்தின் செயற்பாட்டுச் செலவினம் ரூ.2.635மில். ஆகும். வருமானம் ரூ.2.410மில். ஆகும்.

11. திறைசேரி நிதியேற்பாடுகள

	வரவுசெலவுத்திட்ட நிதியேற்பாடு 2018 (ரூ.மில்.)	பெற்ற மானியங்கள் (ரூ.மில்.)	உண்மையான செலவினம் (ரூ.மில்.)	மிகை செலவினம் (ரூ.மில்.)
மீண்டுவரும் செலவு	80.236	46.400	63.686	33.836
மூலதனச் செலவு	8.000	8.000	4.545	3.455
மொத்தம்	88.236	54.400	68.231	37.291

12. ஏனைய நிதியேற்பாடுகள்

	தொகை (ரூ.மில்.)
மீண்டுவரும் செலவு	6,960,496.67
மூலதனச் செலவு	-
மொத்தம்	6,960,496.67

(கமத்தொழில் அமைச்சு, கமத்தொழில் திணைக்களம் மற்றும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம்)

வருடாந்த கணக்கு அறிக்கை - 2018

.

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

இந்த நிதி நிலமைக்கூற்று மற்றும் நிதிச் செயலாற்றுகைக் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருப்பதுடன் இலங்கை அரச சேவையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வரலாற்றுக் கிரய, எண்ணக்கரு அடிப்படையிலும் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

கணக்கீட்டுக் கொள்கைகள் :

- தேய்மானம் கணக்கிடலானது, சொத்துக்கள் கொள்வனவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து மேற்கொள்ளப்படுவதுடன் எல்லா சொத்துக்களும் பயன்பாட்டு ஆயுட்காலம் முழுவதும் தேய்மானம் இடப்படுகிறது.
- பெற வேண்டிய மீதிகள் பொருட்டு அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் என்பன பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- இனங்காணப்பட்ட எல்லா பொறுப்புக்கள் பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- பணிக்கொடைக்கான ஏற்பாடானது பணிக்கொடைக்கு உரித்தான ஒவ்வொரு ஊழியரின் சேவைக் காலத்தை அடிப்படையாகக்கொண்டு கணக்கிடப்படுகிறது.
- அறிந்த எல்லா பொறுப்புக்கள் பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் பின்னரே செலவிலும் மிஞ்சிய வருமானம் கணக்கிடப்பட்டுள்ளது.
- கொள்விலை மற்றும் தேறப்பட்ட பெறுமதி ஆகிய பெறுமதிகளில் மிகவும் குறைந்த பெறுமதியிலேயே இருப்பு கணக்கிடப்படுகிறது என்பதுடன் பின்வரும் இருப்புக்கள் பொருட்டான கிரயம் கீழே குறிப்பிடப்பட்ட முறைகளின் கீழ் கணக்கிடப்படுகிறது.
    - மூலப்பொருள் - முதல் வந்து முதல் விநியோகித்தல் முறையில் உண்மையான கிரயத்தில் காட்டப்படுகிறது.
    - குறை வேலை இருப்பு – நேர் மூலப்பொருள் கிரயத்தில் காட்டப்படுகிறது.
    - முடிவுப்பொருள் இருப்பு – நேர் மூலப்பொருள், மாறும் மேந்தலைச் செலவு மற்றும் நேர் சம்பளம் அடங்கலாக உண்மையான கிரயத்தில் காட்டப்படுகிறது.
    - பாவனைப்பொருள்கள் - உண்மையான கிரயத்தில் காட்டப்படுகின்றன.
- அரசிடமிருந்து பெற்ற நிதியேற்பாடு வருமானக் கூற்றில் வருமானமாக பிரத்தியேகமாக காட்டப்பட்டதுடன், செலவு விடயங்களும் பிரத்தியேகமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

.

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

1. இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை 2018ஆம் ஆணடில் பின்வரும் செயற்றிட்டங்களை மேற்கொண்டது.

செயற்றிட்டம்	நிதியளிப்பு	செயற்றிட்ட அமைவிடம்
பண்ணை அபிவிருத்தி - தணமல்வில	சுய நிதியம்	தணமல்வில
பண்ணை அபிவிருத்தி – புத்தல	சுய நிதியம்	புத்தல
பாரம்பரிய அரிசி செயற்றிட்டம்	சுய நிதியம்	கலன்குட்டிய
நாற்று மேடை - தெகிவளை	சுய நிதியம்	தெகிவளை
நாற்று மேடை - நாரஹேன்பிட்டி	சுய நிதியம்	நாரஹேன்பிட்டி
சோயா சார்ந்த இடை உற்பத்தி செயற்றிட்டம்	கமத்தொழில் அமைச்சு	கன்னோறுவை
சிறிய நீர்ப்பாசன மறுசீரமைப்பு செயற்றிட்டம்	விவசாயி நம்பிக்கைபொறுப்பு நிதியம்	அம்பாந்தோட்டை
அரிசி பலப்படுத்தும் செயற்றிட்டம்	உலக உணவு நிகழ்ச்சித்திட்டம்	கலன்குட்டிய
பழ குடிவகை செயற்றிட்டம்	சுய நிதியம்	கன்னோறுவை
உள்;ர் சோளம் கொள்வனவு செயற்றிட்டம்	விவசாயி நம்பிக்கைபொறுப்பு நிதியம்	புத்தல மற்றும் கலென்பிதுனுவெவ
சோளம் இறக்குமதி	சுய நிதியம்	பிரதான அலுவலகம்
அரிசி மா செயற்றிட்டம்	சுய நிதியம்	கலன்குட்டிய
சோயா செயற்றிட்டம்	சுய நிதியம்	உபுல்தெனிய
சுவபோஷ போசாக்கு செயற்றிட்டம்	சுய நிதியம்	கன்னோறுவை
மவ்போஷ போசாக்கு செயற்றிட்டம்	சுய நிதியம்	கன்னோறுவை
சேதனப் பசளை செயற்றிட்டம்	சுய நிதியம்	புத்தல
விவசாயி உற்பத்திப்பொருள் விற்பனைக்கூடம் – தெகிவளை	சுய நிதியம்	தெகிவளை
உணவு விழா - 2018	சுய நிதியம், கமத்தொழில் அமைச்சு	கிறீன் பாத்- கொழும்பு

.

உ.பின்வரும் வங்கி நடைமுறைக் கணக்குகள் இவ்வாண்டில் இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் கீழ் பேணப்பட்டிருந்தன.

194125	-	திறைசேரியிலிருந்து பெறும் நிதியேற்பாடு கமத்தொழில் அமைச்சு, உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கமத்தொழில் திணைக்களம் என்பவற்றிலிருந்து பெறும் நிதியேற்பாடு புத்தல பண்ணை அபிவிருத்தி, தணமல்வில பண்ணை அபிவிருத்தி, சுவபோஷ செயற்றிட்டம், மவ்போஷ செயற்றிட்டம், பெருந்தோட்டப்பகுதியில் அரிசி மா பாவனையை மேம்படுததும் செயற்றிட்டம், நாற்று மேடை, தெகிவளை விற்பனைக்கூடம், கொம்போஸ்ட் செயற்றிட்டம், சோளம் செயற்றிட்டம், பாரம்பரிய அரிசி செயற்றிட்டம், பழ குடிவகை செயற்றிட்டம், அரிசி பலப்படுத்தும் செயற்றிட்டம்.
337100196138295	-	தெகிவளை விற்பனைக்கூட வருமானம்
80681636	-	சிறிய நீர்ப்பாசனங்களை மறுசீரமைக்கும் செயற்றிட்டம்

3. ஒவ்வொரு செயற்றிட்டம் பொருட்டும் பிரத்தியேக பேரேகள் பேணப்படுகின்றன.

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை
2018 திசம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்று

விபரம்	குறிப்பு	**2018** ரூ.	**2017** ரூ.
சொத்துக்கள்			
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
ஆதனம்,பொறித்தொகுதி,உள்ளீடு	**1**	**344,138,329.70**	**339,966,422.68**
காணி		307,200,000.00	307,200,000.00
கட்டடம்		17,312,402.62	15,505,012.13
மோட்டார் வாகனங்கள்		6,910,136.99	3,376,116.44
இயந்திரமும் பொறியும்		4,585,213.84	5,829,684.51
தளபாடமும் பொருத்துக்களும்		1,337,168.62	1,095,382.81
அலுவலக உபகரணங்கள்		1,621971.38	1,388,060.88
விவசாய உபகரணங்கள்		321,741.92	1,44,000.00
தோட்ட உபகரணங்கள்		188,793.47	251,704.03
பிற உபகரணங்கள்		919,155.04	1,346,999.33
கணினியும் பாகங்களும்		1,214,319.22	1,012,612.21
தற்காலிக கட்டடம்		1,791,989.53	1,903,988.87
அளவை உபகரணங்கள்		127,637.07	184,761.47
கட்புலனாகா சொத்து			
மென்பொருள்		607,800.00	728,100.00
நிதிச் சொத்து		**136,536,633.46**	**93,969,576.67**
சேமிப்பு வைப்புக்கள்		659,760.99	196,000.16
நிலையான வைப்புக்கள்		124,138,311.19	93,553,075.19
இடர் கடன்		11,738,561.28	220,501.32
நடைமுறைச் சொத்துக்கள்		**213,841,986.50**	**47,118,804.59**
வைப்புக்கள்		519,361.50	111,816.50

இருப்பு		4,353,851.68	15,225,417.73
கடன்படுநர்		974,162.77	716,862.77
முற்கொடுப்பனவுகள்		-	1,445,668.16
வருமதிகள்		156,190,229.16	16,082,465.12
கையிலுள்ள, வங்கியிலுள்ள காசு		51,804,426.39	13,536,574.31
மொத்தச் சொத்துக்கள்		**694,516,949.66**	**481,054,803.94**
உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்			
மூலதனமும் ஒதுக்கங்களும்		**432,038,321.71**	**377,315,712.04**
நிதிய மீதி		390,703,946.72	377,703,946.72
திரட்டு நிதியம்		41,334,374.99	(388,234,68)
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்		**6,609,807.00**	**6,898,935.50**
இளைப்பாறல் பணிக்கொடை கடப்பாடு		6,609,807.00	5,198,935.50
இடைக்கால கடன்		-	1,700,000.00
நடப்புப் பொறுப்புக்கள்		**255,868,820.95**	**96,840,156.40**
பிடிப்பு நிதியம்		530,142.68	395,852.40
மீளளிக்கத்தக்க வைப்புக்கள்		94,879,249.45	83,248,149.90
அட்டுறு செலவுகள்		160,459,428.82	13,196,154.10
மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்		**694,516,949.66**	**481,054,803.94**

.

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

2018 திசம்பர் 31இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

விபரம்	குறிப்பு	**2018** ரூ.	**2017** ரூ.
வருமானம்		**118,368,503.17**	**100,221,233.87**
திறைசேரி/அமைச்சு நிதியேற்பாடுகள்	**05,06**	53,360,496.67	44,532,882.42
பிற செயற்பாட்டு வருமானம்	**02**	53,189,348.17	49,578,684.51
சேமிப்பு கணக்கு மீதான வட்டி		8,703,630.83	4,902,736.94
சொத்து விற்னைமூலம் கிடைத்த பணம்		-	
சொத்து விற்னைப் பணத்தை திறைசேரிக்கு அனுப்புதல்		-	
பிற வருமானங்கள்		3,115,027.50	1,206,930.00
செலவினம்		**76,428,459.26**	**62,748,852.41**
ஆளுக்குரிய வேதனாதிகள்		40,038,956.82	37,404,501.50
பிரயாணச் செலவுகள்		541,709.20	697,189.09
வழங்கல்களும் தேவைப்பாடுகளும்		3,786,562.89	2,340,711.10
நிலையான சொத்து பழுதுபார்தலும் பராமரிப்பும்		4,402,944.59	7,602,947.76
மாற்றல், தொடர்பாடல், பயன்பாடு மற்றும் பிற சேவை		27,658,285.76	14,703,502.96
செலவை மிஞ்சிய வருமானம்/ மிகை (குறைவு)		**41,940,043.91**	**37,472,381.46**

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

2018 திசம்பர் 31இல் முடிவடைந்த வருடத்துக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

	குறிப்பு	2018 ரூ.	2017 ரூ.
செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான (பயன்படுத்திய)/ பெற்ற காசுப்பாய்வு			
வருமான வரிக்கு முன் தேறிய இலாபம்/நட்டம்		41,940,043.91	37,472,381.46
சீராக்கங்கள்			
தேய்மானம்	1	5,882,808.65	4,800,502.63
வாகன அகற்றல் /மாற்றல் தேய்மானம்		(100,00.00)	-
ஆதனம்,பொறித்தொகுதி,உபகரணம் அகற்றுதல்/மாற்றுதல்			
விவசாயிகள் கடன்களை பதிவழித்தல்		-	-
முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான வட்டி வருமானம்		(8,611,574.83)	4,902,736.94
வைப்புக்கள்			90,000.00
முந்திய கால சீராக்கங்கள்		(217,434.24)	3,268,553.20
இளைப்பாறல் பணிக்கொடைக்கான ஏற்பாடு			
இளைப்பாறல் நலனுக்கான ஏற்பாடு		1,410,871.50	1,323,650.□8
தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன் செயற்பாட்டு இலாபம்		**40,304,714.99**	**51,857,824.91**
இருப்பு (அதிகரிப்பு) /குறைவு		10,871,566.05	1,036,873.46
பணிக்கொடை செலுத்தல்			
வர்த்தக மற்றும் பிற வருமதிகளில் (அதிகரிப்பு) /குறைவு		(139,326,895.88)	(6,699,383.11)
வர்த்தக மற்றும் பிற சென்மதிகளில் அதிகரிப்பு /குறைவு		159,028,664.55	77,850,083.61
செயற்பாட்டிலிருந்து தோற்றுவித்த காசு		30,573,334.72	72,187,573.96
செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு		**70,878,049.71**	**124,045,398.87**
முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான (பயன்படுத்திய)/ காசுப் பாய்வு			
ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் கொள்ளல்	1	(5,054,715.67)	(7,371,176.13)
ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் அகற்றுதல்/மாற்றுதல்		100,000.00	-
முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) காசுப் பாய்வு		8,611,574.83	(4,902,736.94)
சேமிப்பு வைப்பு அதிகரிப்பு /குறைவு		(463,760.83)	610,118.68
நிலையான வைப்பு அதிகரிப்பு /குறைவு		(47,140,717.93)	(397,303,075.19)
நிலையான வைப்பு அதிகரிப்பு /குறைவு		16,555,481.93	303,750,000.00
வாகன விற்னை வருமான பணத்தை திறைசேரிக்கு அனுப்புதல்		-	-

முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்வு		**(27,392,137.67)**	**(105,216,869.58)**
நிதி நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) காசுப் பாய்வு			
பெற்ற நிதியம்		54,400,000.00	47,440,932.42
மானியம்		(46,400,000.00)	(44,532,882.42)
இடர் கடன் செலுத்துதல்		(12,262,480.00)	(248,064.00)
இடர் கடன் மீள செலுத்துதல்		744,420.04	27,562.68
கடன் மீள செலுத்துதல்		(11,700,00.00)	(13,200,000.00)
பெற்ற கடன்		10,000,000.00	5,000,000.00
		(5,218,059.96)	**(5,512,451.32)**
காசும் காசுக்கு சமமானவைகளில் தேறிய அதிகரிப்பு /(குறைவு)		38,267,85□.08	13,316,077.97
வருட ஆரம்ப காசும் காசுக்குச் சமமானவைகளும்		13,536,574.31	220,496.34
வருட இறுதி காசும் காசுக்குச் சமமானவைகளும்		51,804,□26.39	13,536□574.31
குறிப்பு - A			
வங்கி மீதி		51,804,426.39	220,496.34
சில்லறை காசு		-	-
கையிலுள்ள காசு		-	-
		51,804,426.39	**220,496.34**

.

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

2018 திசம்பர் 31இல் முடிவடைந்த வருடத்துக்கான உரிமை மூலதனத்தில் மாற்றம் பற்றிய கூற்று

	மீள விலைமதித்தல் நிதியம் ரூ.	நிதிய மீதி ரூ.	திரட்டு நிதியம் ரூ.	மொத்தம் ரூ.
01.01.2018 இல் மீதி	328,671,316.14	49,032,630.58	(388,234.68)	377,315,712.04
பெற்ற நிதியம்		54,000,000.00		54,000,000.00
மானியம்		(46,400,000.00)		(46,400,000.00)
முந்திய வருட சீராக்கம்		-	(217,434.24)	(217,434.24)
குறை ஒதுக்கீடு	5,000,000.00	-	-	5,000,000.00
தேறிய மிகை / (குறை)			41,940,043.91	41,940,043.91
	333,671,316.14	**57,032,630.58**	**41,334,374.99**	**432,038,321.71**

.

குறிப்பு 01
நடைமுறையல்லாத சொத்துக்கள்

சொத்து வகுதி	காணியும் கட்டடமும்	மோட்டார் வாகனம்	பொறியும் இயந்திரமும்	அலுவலக உபகரணம்	தளபாடமும் பொருத்துக்களும	விவசாய உபகரணம	தோட்ட உபகரணம	பிற உபகரணம்	புகைப்பட, சினிமா உபகரணம்	தற்காலிக கட்டடம்	அளவை உபகரணம	கணினியும் பாகங்களும்	மென்பொருள்	**மொத்தம்**
2018.01.01 இல் மீதி	322,705,012.13	3,376,116.44	5,829,684.51	1,388,060.88	1,095,382.81	144,000.00	251,704.03	1,346,999.33	-	1,903,988.87	184,761.47	1,012,612.21	728,100.00	339,966,422.68
சேர்வனவு	2,773,729.74	5,000,000.00	200,583.00	682,470.95	514,052.00	263,000.00	23,979.98	-	-	-		596,900.00	-	10,054,715.67
அகற்றல்/ மாற்றல் (நிலையான சொத்து)	-	-	(100,000.00)	-	-	-	-	-	-	-	-	-	-	(100,000.00)
அகற்றல்/ மாற்றல் (திரண்ட தேய்விட்ட பெறுமதி)	-	-	100,000.00	-	-	-	-	-	-	-	-	-	-	100,000.00
ஆண்டுக்கான தேய்மானம்	(966,339.25)	(1,465,979.45)	(1,445,053.67)	(448,560.45)	(272,266.19)	(85,258.08)	(86,890.54)	(427,844.29)	-	(111,999.34)	(57,124.40)	(395,192.99)	(120,300.00)	(5,882,808.65)
தேறிய மீள் விலைமதித்தல்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
2018.12.31 இல் தேறிய பெறுமதி	**324,512,402.62**	**6,910,136.99**	**4,585,213.84**	**1,621,971.38**	**1,337,168.62**	**321,741.92**	**188,793.47**	**919,155.04**	-	**1,791,989.53**	**127,637.07**	**1,214,319.22**	**607,800.00**	**344,138,329.70**
மீள் விலைமதித்தல்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-

மிகை மொத்தம்														
மீள் விலைமதித்தல் குறை மொத்தம்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
மொத்த உச்ச பெறுமதி	328,230,573.05	12,302,500.00	7,810,393.00	3,300,092.73	2,581,957.98	902,500.00	421,969.98	2,740,400.00	3,540.00	2,239,986.89	279,412.00	2,902,860.00	1,089,000.00	364,805,185.63
